**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 06.08.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

தலைநகர் டெல்லியில், பல்வேறு மத்திய அமைச்சகங்கள் ஒரே இடத்தில் செயல்பட ஏதுவாக கட்டப் பட்டுள்ள, 3ஆம் கட்ட **கர்த்தவ்ய பவன்** கட்டடத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார்.

பிரதமர் இன்று, உத்தராகண்ட் முதலமைச்சரைத் தொடர்பு கொண்டு, **திடீர் வெள்ளம்** தொடர்பான **மீட்புப் பணி நிலவரங்கள்** குறித்து கேட்டறிந்தார்.

வங்கிகளுக்கான **ரெப்போ வட்டி விகிதம்**, தற்போதுள்ள அதே அளவில், 5.5 சதவிகிதமாக நீடிக்கும் என, ரிசர்வ் வங்கியின் **பணக் கொள்கைக்** குழு அறிவித்துள்ளது.

புதுச்சேரியில், **கடலூர் சாலை ஏ.எப்.டி மைதானம்** அருகே, **ரயில்வே மேம்பாலப் பணிகள்** தொடங்கி உள்ளதால், **போக்குவரத்து மாற்றம்** அறிவிக்கப் பட்டுள்ளது.

---

மோடி-கட்டிடம் 1 (8)

தலைநகர் டெல்லியில், பல்வேறு மத்திய அமைச்சகங்கள் ஒரே இடத்தில் செயல்பட ஏதுவாக கட்டப் பட்டுள்ள, 3ஆம் கட்ட **கர்த்தவ்ய பவன்** கட்டடத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார். ஒன்றரை லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில், நவீன முறையில்

கட்டப் பட்டுள்ள இந்த 6 மாடிக் கட்டிடத்தின் பல்வேறு பகுதிகளை பிரதமர் பார்வையிட்டு, கட்டிடத்தின் சிறப்பு அம்சங்கள் குறித்து கேட்டறிந்தார். மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் இந்த சந்தர்ப்பத்தின் போது உடன் இருந்தார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

மோடி-கட்டிடம் 2 (10)

**(வாய்ஸ்)**

புதிய கர்த்தவ்ய பவன் கட்டிடம், ஒவ்வொரு தனி மனிதருக்கும் சேவை புரிவதிலும், சுயசார்புடன் கூடிய, முன்னேறிய இந்தியா ஒன்றை உருவாக்குவதிலும், அரசுக்குள்ள உறுதிப்பாட்டின் அடையாளம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் கூறியுள்ளார். அரசின் திட்டங்கள், மற்றும் கொள்கைகளை விரைவாக மக்களுக்கு எடுத்துச் செல்லவும், நாட்டின் வளர்ச்சியில் புதிய உத்வேகம் ஏற்படுத்தவும், இதனால் ஏதுவாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தலைநகர் டெல்லிக்கான, விரிவான சென்டரல் விஸ்டா திட்டத்தின் ஒருபகுதியான கர்த்தவ்ய பவன் கட்டிடம், அரசுத் துறைகளுக்காக கட்டப்பட்டு வரும் இத்தகைய கட்டிடங்களில், முதலாவதாக அமைவதும் குறிப்பிடத்தக்கது.

---------------------

மோடி-உத்தராகண்ட் (15)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, உத்தராகண்ட் முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமியை தொடர்பு கொண்டு, உத்தரகாசி மாவட்டத்தில், திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் உதவி-மீட்புப் பணிகளின் நடப்பு நிலவரம் குறித்து கேட்டறிந்தார். நேற்று இரவு முழுவதும், மீட்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டது குறித்த விவரங்களை, பிரதமரிடம் தாம் எடுத்துக் கூறியதாக, திரு. புஷ்கர் சிங் தாமி, சமூக ஊடகத்தில் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று அவர் வான் வழியே சுற்றிப் பார்த்து, நிலவரங்கள் குறித்து, டேராடூனில் அவசர மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். இதற்கிடையே, உத்தரகாசி மாவட்டத்தில், மேக வெடிப்பை தொடர்ந்து, கீர் கங்கா நதியில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதால் பாதிக்கப்பட்ட தராலி பகுதியில், இந்திய ராணுவம், மற்றும், மத்திய – மாநில பேரிடர் மீட்புப் படையினர் அடங்கிய மீட்புக் குழுக்கள், போர்க்கால அடிப்படையில், மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இப்பகுதியில் இருந்து இதுவரை 130 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

---------------------

மோடி-வேளாண்மை (15)

**இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ், புதுடெல்லியில் செயல்படும் பூசா இன்ஸ்டிடியூட் – வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், நாளை, எம்.எஸ் சுவாமிநாதன் நூற்றாண்டு சர்வதேச**

மாநாட்டை, பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார். உணவு மற்றும் அமைதிக்கான முதலாவது **எம்.எஸ். சுவாமிநாதன் விருதையும்** அவர் வழங்கிச் சிறப்பிக்கிறார். **எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அமைப்பும், உலக அறிவியல் அகாடமியும்** இணைந்து, இந்த விருதை நிறுவி உள்ளன. உணவுப் பாதுகாப்பு, மற்றும், **பருவநிலை நீதியையும்,** நலிவடைந்த பிரிவினருக்கான அமைதி, மற்றும் சமத்துவத்தையும் மேம்படுத்துவதில், **ஆசிய** நாடுகளில் இருந்து முக்கிய பங்காற்றிய தனி நபர்களுக்கு, இந்த விருது வழங்கப்பட உள்ளது. **அனைவருக்கும் உணவு** என்பதை உறுதிப் படுத்தும் முயற்சிகளுக்கு, வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், **பசுமைமாறாப் புரட்சி-உயிரி இன்பத்திற்கான பாதை** என்ற கருப்பொருள் அடிப்படையில், நாளைய மாநாடு நடைபெறும்.

---------------------

*நாடாளுமன்றம்* (15)

பீகார் மாநிலத்திற்கான சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து விவாதம் கோரி, இன்று நாடாளுமன்றத்தில், எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவை முதலில் இரு முறையும், பிற்பகல் 2 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மாநிலங்களவையில் அலுவல்கள், முதலில் ஒரு முறையும், பிற்பகல் 2 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவையில்

அமளிக்கு இடையிலேயே, 2024ஆம் ஆண்டு, வர்த்தகக் கப்பல் மசோதா, அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கொண்டு வந்த திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. முன்னதாக, 80 ஆண்டுகளுக்கு முன்னர், இதே நாளில், ஹிரோஷிமா-நாகசாகி அணுகுண்டு தாக்குதலில் பலியானவர்களுக்கு, அவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநிலங்களவையில், முன்னாள் உறுப்பினர் சத்யபால் மாலிக் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அமளிக்கு இடையிலேயே, கடல்வழி சரக்குப் போக்குவரத்து மசோதா, அவையில் நிறைவேற்றப்பட்டது.

----------------------

*ரிசர்வ் வங்கி (8)*

ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கைக் குழு, வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை, தற்போதுள்ள அதே அளவில், 5.5 சதவிகிதமாகத் தொடர முடிவு செய்துள்ளது. மும்பையில் 3 நாட்களாக நடைபெற்ற, பணக் கொள்கைக் குழுவின் கூட்டத்திற்கு பின்னர், இன்று இவ்வாறு அறிவிக்கப் பட்டது. நடப்பு நிதியாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றிய ரிசர்வ் வங்கியின் கணிப்பும், தற்போதுள்ள அதே அளவில், 6.5 சதவிகிதமாக நீடிக்கிறது. நடப்பாண்டில் பணவீக்கம் 3.1 சதவிகிதமாக இருக்கும் என்றும், ரிசர்வ் வங்கி கணிப்பு வெளியிட்டுள்ளது.

----------------------

*புதுச்சேரி பாலம்* (3)

புதுச்சேரியில், கடலூர் சாலை ஏ.எப்.டி மைதானம் அருகே, ரயில்வே மேம்பாலப் பணிகள் தொடங்கி உள்ளதால், போக்குவரத்து மாற்றம் அறிவிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து எமது செய்தியாளர் வழங்கும் விவரங்கள்.....

**(வாய்ஸ்-கந்தன்)**

**----------------------**

*தாய்ப்பால்* (8)

குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் கலாச்சாரத்தை உலகளவில் மீண்டும் நிலை நிறுத்தும் நோக்கத்திலான, உலக தாய்ப்பால் வாரம், இம்மாதம் 1ஆம் தேதி முதல் கடைபிடிக்கப் படுகிறது. பிறந்த குழந்தைக்கு, முதல் 6 மாதங்கள் வரை, தாய்ப்பால் மட்டுமே கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து, அனைத்து நாடுகளிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. உலக தாய்ப்பால் வாரம் குறித்தும், புதுச்சேரியில் இதுதொடர்பாக நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்தும், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள், எமது செய்தியாளரிடம் பேசுகையில்.....

**(வாய்ஸ்-செவ்வேள்)**

**----------------------**

*பதினோராம் வகுப்பு* (9)

புதுச்சேரியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில், 11ஆம் வகுப்பில் சேர விண்ணப்பித்து, இடம் கிடைக்காதவர்களும், அண்மையில்

10ஆம் வகுப்பு துணைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களும், வரும் 7,8, மற்றும், 11ஆம் தேதி, குருசுக்குப்பம் என்.கே.சி. அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் கலந்தாய்வில், பெற்றோருடன், 10ஆம் வகுப்பு ஆவணங்களை எடுத்து வந்து கலந்து கொள்ளலாம் என, பள்ளிக் கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது. புதுச்சேரி குடியிருப்பு சான்றிதழ் இல்லாத மாணவர்கள், 11ஆம் தேதி மதியம் 2.30 மணிக்கு கலந்தாய்வுக்கு வரலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

*வானிலை* (14)

வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் காரணமாக, இன்றைய தினம் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளைய தினம் வடதமிழகத்தின் அநேக இடங்களிலும், தென்தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், மிதமான மழை எதிர்ப்பார்க்கப் படுகிறது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, விழுப்புரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வரும் 12ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24

மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே. பேட்டையில், 12 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------

*சென்னை-சதுரங்கம்* (8)

சென்னையில் இன்று தொடங்குவதாக இருந்த கிரேண்ட் மாஸ்டர்ஸ் சதுரங்கப் போட்டிகள், எதிர்பாராத தீவிபத்து காரணமாக, நாளை தொடங்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது. போட்டிகளுக்கான புதிய அட்டவணை, விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சதுரங்கப் போட்டியில் பங்கேற்க வந்துள்ள, வீரர்கள், மற்றும் இதர அலுவலர்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அருகில் உள்ள விடுதிகளுக்கு மாற்றப் பட்டுள்ளனர். போட்டி நடைபெறும் தளம், பாதுகாப்பாகவே உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

*காசநோய் ஆய்வு* (17)

காசநோயை குணப்படுத்துவதில், முறையான சத்துணவின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில், இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் முக்கிய ஆய்வு, இந்நோய் பற்றிய உலக அளவிலான கொள்கையில், தாக்கம் ஏற்படுத்தி உள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமையில், ஜார்கண்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், காநோய் தாக்குதலையும், இந்நோயினால் ஏற்படும் மரணங்களையும், கூடுதல் சத்துணவு மூலம் கணிசமாக குறைக்கலாம் என்பதற்கான முதலாவது ஆதாரமாக அமைந்துள்ளது. இந்த ஆய்வின்

அடிப்படையில், உலக சுகாதார அமைப்பு, காசநோய் பற்றிய உலக அளவிலான வழிகாட்டு நெறிமுறைகளை திருத்தி அமைத்துள்ளது. உலகிலேயே தொற்றும் தன்மை அதிகம் உள்ள நோயான காசநோய்க்கு எதிரான போராட்டங்களை வலுப்படுத்தும் வகையில், கூடுதல் ஆராய்ச்சிகள் மற்றும் புதுமையாக்கம் தேவை என்றும், உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. தென்கிழக்கு ஆசியாவில்தான் காசநோய் அதிகம் என்பதால், குறிப்பாக இந்நாடுகள், காசநோய் இல்லாத உலகை படைப்பதற்கான முயற்சிகளை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டும் என்றும், உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தி உள்ளது.

----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தலைநகர் டெல்லியில், பல்வேறு மத்திய அமைச்சகங்கள் ஒரே இடத்தில் செயல்பட ஏதுவாக கட்டப் பட்டுள்ள, 3ஆம் கட்ட **கர்த்தவ்ய பவன்** கட்டடத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார்.

பிரதமர் இன்று, உத்தராகண்ட் முதலமைச்சரைத் தொடர்பு கொண்டு, **திடீர் வெள்ளம்** தொடர்பான **மீட்புப் பணி நிலவரங்கள்** குறித்து கேட்டறிந்தார்.

வங்கிகளுக்கான **ரெப்போ வட்டி விகிதம்**, தற்போதுள்ள அதே அளவில், 5.5 சதவிகிதமாக நீடிக்கும் என, ரிசர்வ் வங்கியின் **பணக் கொள்கைக் குழு** அறிவித்துள்ளது.

புதுச்சேரியில், கடலூர் சாலை ஏ.எப்.டி மைதானம் அருகே, **ரயில்வே மேம்பாலப் பணிகள்** தொடங்கி உள்ளதால், **போக்குவரத்து மாற்றம்** அறிவிக்கப் பட்டுள்ளது.